**அடைக்கல அன்னை சபைத் தலைமையகம்**

**அரண்வாயல் குப்பம்**

**திருவள்ளூர் மாவட்டம் - 602 025.**

**சுற்று மடல் எண்: 84** **நாள் : 24.09.2021**

***என் பாசத்திற்குரிய அருட்சகோதரிகளே!***

**நெஞ்சம் நிறைந்து உங்களை அன்போடு வாழ்த்துகிறேன்!**

நம் தந்தை புனித பிரான்சிஸ் அசிசியாரின் திருவிழாவிற்குத்

தயாரிப்பதற்கான காலத்தில் நாம் இருக்கிறோம்.

800 ஆண்டுகளைக் கடந்தும் ஒரு புனிதரின் வாழ்வு

இன்றும் நாம் வாழும் உலகிற்கு மிகவும் அர்த்தம் தருகிறது என்றால்

அது **தந்தை பிரான்சிஸின் வாழ்வுதான்.**

அத்தகைய வீரியமிக்க புனிதரை

நம் சபையின் இரண்டாம் பாதுகாவலராய்க் கொண்டிருப்பது

நாம் பெற்ற பேறு என்றே எண்ணுகிறோம்.

**அவரது வாழ்வை நமதாக்கி விழுமியங்களை**

**நம் வாழ்வில் வேரூன்றச் செய்வதற்காகவே**

**ஆண்டுதோறும் அவரது விழாவைக் கொண்டாடி**

**நம்மைப் புதுப்பித்துக்கொள்ள முனைகிறோம்.**

இன்று நமக்கும் நம் சமூகத்திற்கும் மிக அதிகம் தேவைப்படுவது

நம் தந்தை பிரான்சிஸிடம் வெளிப்பட்ட **தாழ்ச்சியும் பொறுமையும்**தான்.

நம் சமூகத்திலிருந்து அதிகம் வெளியேறிவிட்ட பண்புகளில் மிக முக்கியமானது **தாழ்ச்சி**.

ஒரு காலத்தில் நம் தமிழ் சமூகத்தில் வேரூன்றி இருந்த இந்த பண்பு

இன்று நம்மிடம் அரிதாகக் காணப்படுகிறது.

காரணம் ***மனிதம் மையம் பெற வேண்டும்***

***மனித மாண்புகள் மதிக்கப்பட வேண்டும்***

என்ற நம் விழிப்புணர்வு இன்று எல்லைகளைத் தாண்டி

**'தான்'** என்ற ஆணவத்தையும் தனது என்ற கர்வத்தையும் உருவாக்கிவிட்டது.

மனித மனம், தான் மட்டுமே உலகில் வாழ்வதற்கான உரிமை பெற்றவர் என்று

எண்ணுவதுதான் இத்தனை பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது.

நம்மைப் போலவே பிறரும் பிற உயிர்களும் பிரபஞ்சமும்

வாழும் உரிமை பெற்றவர் என்பதை எண்ணிப் பார்த்தால்

பல பிரச்சினைகள் தானாக சரியாகும்.

கையில் உள்ள ஒரு மாம்பழத்தைக் கூட

துண்டு துண்டாக வெட்டி பகிர்ந்து சாப்பிட்ட நாம்

இன்று மற்றவருக்கு இல்லாவிட்டால் என்ன

எனக்கு முழுசாக பழம் வேண்டும் என்று எண்ணிப்பார்க்க, வாதாட

என் உரிமை என்று குரல் எழுப்பத் தயாராய் இருக்கிறோம்.

இதெல்லாம் எதிலிருந்து வருகிறது? **தான் என்பதிலிருந்துதானே?**

**'தாழ்ச்சி**' அடுத்தவரின் இருத்தலை அங்கீகரிக்கிறது.

என்னைப் போலவே எல்லோருக்கும்

வாழும் உரிமை உண்டு என்று ஏற்றுக்கொள்கிறது.

எல்லோரும் வாழும்போதுதான் என் வாழ்வு நிறைவு பெறுகிறது

என்ற உண்மையைப் புரிந்து கொள்கிறது.

**தாழ்ச்சியானவரால்தான் அடுத்தவரின் உயர் பண்புகளைக்**

**கண்டு வியந்து பாராட்ட இயலும்.**

தாழ்ச்சிதான் அடுத்தவர் என்னைவிட மதிப்புக்குரியவர் என்று நினைக்கிறது.

மற்றவரின் நல்ல இயல்புகளை, மனிதநேயச் செயல்பாடுகளைக் கண்டு

மகிழ்ச்சியடைய தாழ்ச்சிதான் அடிப்படைக் காரணம்.

**தாழ்ச்சி சகோதரத்துவத்தை உயிர்ப்பிக்கிறது.**

**மன்னிப்பு கேட்கவும் மன்னிக்கவும் நம்மைத் தூண்டுவது தாழ்ச்சிதான்.**

**நாம் வாழும் இடங்களில் அன்பு மன்னிப்பு அமைதி**

**குடியிருக்க வேண்டுமெனில் தாழ்ச்சியில் பழகுவோம்.**

தாழ்ச்சி என்பது தாழ்வு மனப்பான்மையல்ல

இருப்பதை இருப்பது போல் அங்கீகரிக்கும் மனநிலை.

தனக்கு இல்லாததை இருப்பதுபோல் கற்பனை செய்வதிலிருந்து

தாழ்ச்சி நம்மைத் தடுத்துவிடுகிறது.

எல்லாம் அறிந்தவர்போல் பேசும் அரைவேக்காட்டுத்தனத்திலிருந்து

தாழ்ச்சி நம்மைக் காத்துக்கொள்கிறது.

மொத்தத்தில் தாழ்ச்சி நாமும் மற்றவர்களும் இயற்கையும்

இசைவான இணக்கத்தோடு இப்பிரபஞ்சத்தில் வாழ வழிகோல்கிறது.

எனவே **தாழ்ச்சியை நம் ஆணிவேராய்க் கொள்வோம்.**

இன்று மிகவும் அரிதாகக் கடைப்பிடிக்கப்படும் மற்றொரு பண்பு **பொறுமை**.

உலகில் பொறுமையைப்போல் வேறெதுவும் அதிகம் உதாசீனப்படுத்தப்படுவதில்லை.

எல்லோரும் ஏதோ ஒரு நெருக்கடிக்குள் வாழ்வது போன்றே தோன்றுகிறது.

4 வயது வாண்டு கூட ஒரே torture ஆக இருக்கிறது என அங்கலாய்க்கிறது.

காரணம் எல்லோரும் Busy ஆக இருக்கிறார்கள்.

பொறுமையாக உணவைக் கூட சுவைக்க நேரமில்லை.

பொறுமை கால விரயமாகக் கருதப்படுகிறது.

**நமது பேச்சில் செயல்பாடுகளில்**

**நிதானத்தைக் கொண்டு வருவதுதான் பொறுமை.**

அடுத்தவரின் குறைகளைக் காது கொடுத்துக் கேட்க

காரணமாயிருப்பதும் பொறுமையே.

மற்றவரின் நிதானமற்ற செயல்களை சொற்களை

பெருந்தன்மையோடு சகித்துக்கொள்ளக்

காரணமாக இருப்பதும் பொறுமையே.

பொறுமைதான் வார்த்தைகள் வரம்பு மீறாமல்

செயல்கள் எல்லை தாண்டாமல் காக்கிறது.

உணர்ச்சிகளைக் கொட்டிவிட்டு வருத்தப்படும்

அறியாமையிலிருந்து பொறுமை நம்மைக் காக்கிறது.

**மற்றவர்கள் நம்மை விரும்ப நேசிக்க**

**மிக முக்கியமான காரணிகளில் ஒன்று பொறுமை.**

பொறுமையானவர்களின் நிர்வாகம் நேர்த்தியாகச் செல்கிறது.

இல்லத்தின் அமைதிக்கும் சமாதானத்திற்கும்

காரணமாய் அமைவது பொறுமைதான்.

இன்று தாழ்ச்சியும் பொறுமையும் கையாலாகாதவர்களின்

பண்புகளாகப் பார்க்கப்படுகின்றன.

தகுதியானவர்களின் ஆயுதம்தான் தாழ்ச்சியும் பொறுமையும் என்பதை உணர்வோம்.

தாழ்ச்சியிலும் பொறுமையிலும் தேர்ச்சி பெற்றவர்களை

வீழ்த்தும் ஆயுதம் ஏதுமில்லை.

இவைகள் ஏதோ புண்ணியங்கள் புனிதருக்கு உரியவை.

மனிதர்களாகிய நமக்குத் தேவையில்லை

என்ற எண்ண மாயையில் வாழ்கிறோம்.

**மனிதர்களாகிய நமக்குத்தான் தாழ்ச்சியும் பொறுமையும்**

**மிக மிக அவசியம் என உணர்ந்து கொள்வோம்.**

இவைகள் இல்லாமல் மானுட வாழ்வில் நிறைவாக வாழ்வது

இயலாது எனப் புரிந்து கொள்வோம்.

தந்தை பிரான்சிஸை முன்மாதிரியாகக் கொண்டு

தாழ்ச்சியிலும் பொறுமையிலும் நாமும் வளர முயல்வோம்

**இந்த நவநாள் காலத்தில் நம் தந்தையைப் பின்பற்றி வாழ்வோம்.**




**அக ஒளிப்பயணத்தில் தோழமையுடன்**

Sr. Maria Philomi FBS

**சபைத் தலைமை அன்னை**